# உலகமயமாதலும் பாலியல் சீர்கேடுகளும் - ஓர் ஒழுக்க மெய்யியல் ஆய்வு

**அ.பிறேமினி**
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## ஆய்வுச்சுருக்கம்

மெய்யியலானது வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கையும் வாழ்க்கைக்கான திசையினையும், வாழ்தலுக்கான ஒரு திட்டத்தையும் கொண்டுள்ளது. மெய்யியலின் பிரதான பிரிவான ஒழுக்க மெய்யியல் மனித வாழ்வியலில் ஒழுக்க நடத்தைகள் பேணப்பட வேண்டியவை, மற்றும் ஒழுக்க மனப்பாங்கோடு வாழ்வதையும் இதனூடாக எது நல்லது? எது கெட்டது? என்பதை தெரிந்து கொண்டு வாழ்வதனையும் குறிக்கின்றது. இத்தகைய மெய்யியல் சிந்தனையானது அன்றாடம் மனித வாழ்வில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற பாலியல் சீர்கோடு பற்றியும் தனது பார்வையைச் செலுத்துகின்றது. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் பாலியல் சீர்கோடுகளுக்கு பல வழிகளிலும் உதவியாக அமைந்து வருவது உலகமயமாதல் செயற்பாடகும். மேற்குலகம் சுதந்திரமான, கட்டுப்பாடற்ற ஆண், பெண் உறவை விரும்புகின்றது. எனவே, உலகமயமாக்கல் மூலம் உலகின் ஏனைய நாடுகளிலும் இந்நிலையை இது உருவாக்க விரும்புகின்றது. ஆண், பெண் இருபாலாருக்குமிடையில் இறைவன் ஒரு வகை ஈர்ப்பை இயல்பாகவே வைத்திருக்கின்றான். இதனை இனக்கவர்ச்சி என்பர். பசி, தாகம் எழுவது போல பாலுணர்வும் இயல்பான ஒன்றாகும். உலக வாழ்வு நிலைப்பதற்கும் இனப்பெருக்கத்திற்கும், மனித குலம் உட்பட அனைத்து உயிரினங்களின் இருப்புக்கும் வழியாக அமைத்திருப்பது ஆண், பெண் உறவுதான். இத்தகைய தூய்மையான உறவு உடைக்கப்பட்டு பல்வேறு சீர்கேடுகளும், இறப்புக்களும் நிகழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக அமைவது உலகமயமாதல் ஆகும்.

எனவே தொழிநுட்பமானது முழுக்க முழுக்க மனிதர்களுக்கு நன்மையளிப்பதாகவோ, மானுடர்களின் நலனுக்காகவோ, மனிதகுல அமைதிக்காகவோ மாத்திரம் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை. அவை மனித குல அழிவையும், நாடுகளினது வல்லரசுத் தன்மையினை நிலைநிறுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். துரிதகதியில் அதிகரித்து வருகின்ற தொழிநுட்பவளர்ச்சி காரணமாக உலகில் பல பகுதிகளிலும் பாலியல் சீர்கேடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றதை நாம் தினமும் சமூக வலைத்தளங்களின் ஊடாக பார்த்துக்கொண்டிருக்கின்றோம். சிறுவர்கள் முதல் வளர்ந்துவருவோர் வரை இத்தகைய கொடூரமான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனார்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது உலகமயமாதல் என்பது அருமையான மிக இன்றியமையாத கொள்கை போன்று தோன்றும். ஆனால் ஒரேயடியாக இந்த கொள்கை ஆபத்தானது என்று சொல்லிவிட முடியாது. இருந்தும் நம் அடையாளங்கள் அனைத்தும் அழிந்த பிறகு யாருக்காக, யாருடைய வளர்ச்சிக்காக நம் முன்னேற்றம்? என்ற வினாவை சற்றே நாம் சிந்தித்துப் பார்த்தல் மிக நல்லது. உலகமயமாதல் செயற்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் மனித சமுதாயத்திற்கு நன்மை கிடைக்க வழி செய்வதோடு அதிகளவில் பாலியல் சீர்கேடுகள் ஏற்படவும் வழி அமைத்துக் கொடுக்கின்றது. இன்று குடி, களவு, விபச்சாரம், பாலியல் துஸ்பிரயோகம் போன்றவற்றின் விளிம்பில் எமது சமூகம் தொத்திக் கொண்டிருக்கிறது. எனவே எனக்கென்ன என்று

ஒதுங்கிச் செல்லாமல் நம் உடன்பிறப்புகளுக்கு தோள்கொடுப்பதோடு, இன்றைய உலகை பற்றி எரிக்கின்ற பிரச்சினையாக மாறியுள்ள பாலியல் சீர்கேடுகள் பற்றி ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

உலமயமாதல் மூலம் பாலியல் சீர்கேடுகள் இடம்பெறகின்றதா?, அவ்வாறாயின் எவ்வாறான சீர்கேடுகள் இடம்பெறுகின்றன? அதற்கான காரணங்களையும் அதற்குரிய தீர்வுகளையும் கண்டறிய வேண்டும்.

## ஆய்வு முறையியல்

இவ் ஆய்விற்கான தரவுகளும், தகவல்களும் இரண்டாம், மூன்றாம் நிலைத்தரவுகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தளம் மூலம் பெறப்பட்ட தரவுகள், அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் முதலியவை தொகுத்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வுக் கருதுகோள்

‘‘பாலியல் சீர்கேடுகள் ஏற்படுவதற்கு உலகமயமாதல் செயற்பாடு எவ்வகையில் காரணமாக அமைகின்றது என்பதைக் கண்டறிதல்.’’

## உலகமயமாதலும் பாலியல் சீர்கேடுகளும்

உலகமயமாதல் என்பது தொலைத்தொடர்பாடல், போக்குவரத்து, தகவல்தொழிநுட்பம், அரசியல், பண்பாடு போன்ற துறைகளின் முன்னேற்றங்களினால் உலக சமூகங்களுக்கிடையேயான தொடர்பு அதிகரிக்கப்பட்டு, இடைவெளிகள் குறைக்கப்பட்டு உலகமே ஒரு சிறிய கிராமமாக மாறும் செயற்பாடாகும். மேலும் பொருளியல், சமூக மற்றும் சூழலியல் அடிப்படையில் உலகமயமாதலை எதிர்மறையான, விரும்பத்தகாத ஒரு விடயமாக கருதுகின்றது. இதன்படி உலகமயமாதல் வளர்ந்து வருகின்ற சமுதாயங்களின் மனித உரிமைகளை நசுக்குகிறது என்றும், வளத்தைக் கொண்டுவருவதாகக் கூறிக்கொண்டு கொள்ளை இலாபமீட்டுவதை அனுமதிக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவை தவிரப் பண்பாட்டுப் பேரரசுவாத நடவடிக்கைகளினூடாகப் பண்பாட்டுக் கலப்புக்கு வழிவகுப்பதும், செயற்கைத் தேவைகளை ஏற்றுமதி செய்வதும், பல சிறிய சமுதாயங்கள், சூழல்கள் மற்றும் பண்பாடுகளைச் சிதைத்து விடுவதும் இதன் எதிர்மறை விளைவுகளாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

உலகமயமாக்கல் எனும் பெயரில் இன்றைய உலகில் திணிக்கப்பட்டு வரும் நவீன காலணித்துவம் அரசியல் பொருளாதார ரீதியான அமெரிக்க தலைமையிலான மேற்குலகின் மேலாதிக்கத்தை உலகில் வலுவடையச் செய்வதை மாத்திரமின்றி சிந்தனை ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் உலகை அடிமைப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தவகையில் மேற்குலகின் உலகாயுத, சடவாத சிந்தனைகளும், கலாசாரமும் மூன்றாம் மண்டல நாடுகளில் பொதுவாக அறிமுகப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. உணவு வகைகள், குடிபானங்கள், உடைகள், நகைச்சுவைகள், காட்டூன்கள், மொழி, இசை, விளையாட்டுக்கள் முதலான சாதாரண அம்சங்கள் முதல் அனைத்தும் மேற்குலக கலாச்சாரத்தை பிரதிபலிப்பவையாகவே அமைந்துள்ளன.

மேற்குலகம் சுதந்திரமான ஆண், பெண் உறவை விரும்புகின்றது. எனவே உலமயமாக்கல் மூலம் ஏனைய நாடுகளிலும் இந்நிலையை அது உருவாக்க விரும்புகின்றது. தனது சுதந்திரமான எத்தகையை தார்மீக கட்டுபாடுகளுமற்ற கலாச்சரத்தை உலகமயப்படுத்துவதற்காக அவ்வப்போது

சர்வதேச மாநாடுகளையும் நடத்தி வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர் கெய்ரோவிலும், பீஜிங்கிலும் நடைபெற்ற சனத்தொகை மாநாடுகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். இம்மாநாடுகளில் பெறப்பட்ட தீர்மானங்களுள் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. திருமணத்தின் மூலமோ, திருணமின்றியோ ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உருவாக்கப்படும் உறவு அங்கீகரிக்கப்பட்டதாகும்.

02. ஆணும் பெண்ணும் மணம் முடிப்பது போலவே ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் மணமுடிக்கமுடியும்.

ஆண், பெண் பால் வேறுபாட்டை மறுக்கும் இவர்கள் கணவன், மனைவி என்ற புனிதமான உறவையும் கொச்சைப்படுத்துகின்றனர். கணவனை வாழ்க்கைத் துணைவர் என்ற அளவில் மாத்திரமே இவர்கள் அங்கீகரிக்கின்றனர். சட்டரீதியற்ற முறையில் பிறக்கும் குழந்தைகளைக் கூட Natural Baby என அழைத்து அங்கீகாரம் வழங்குகின்றனர். தற்போது அதனை Love baby என அழைக்கமுற்பட்டுள்ளனர். இத்தகைய சமூக அமைப்பு முறையினை கிழக்குலகிலும் உருவாக்க நினைக்கின்றனர். ஒருத்திக்கு ஒருத்தன் என்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற கிழக்குலக சமூக அமைப்பு திசைமாறிச் செல்வதற்கு ஒரு காரணமாக அமையக் கூடியது உலகமயமாக்கல் செயற்பாடாகும்.

கிழக்குலகில் பொதுவாகவும், குறிப்பாகவும் பேணப்படுகின்ற இறுக்கமான குடும்ப அமைப்பை சீர்குலைக்க கையாளப்படும் உத்திகளில் சினிமா, தொலைக்காட்சி, வானொலி, இன்டர்நெட், பொப்பாடல்கள், சஞ்சிகைகள், விளம்பரங்கள், Fashion show, அழகு சாதனப் பொருட்கள் இவ்வாறு தொடர்பாடல் ஊடகங்கள், பல்தேசிய கம்பனிகள் முதலானவற்றுக்கூடாக மேற்குலகு தனது கலாசார திணிப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு தொடர்பாடல் ஊடகங்கள், பல்தேசிய கம்பனிகள் முதலானவற்றுக்கூடாக மேற்குலகு தனது கலாசாரத் திணிப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது. Holly Wood திரைப்படங்களின் செல்வாக்கின் விளைவாக Bolly Wood திரைப்படங்களும் வன்முறையையும், ஆபாசத்தையும் மிக கேவலமாக அரங்கேற்ற ஆரம்பித்துள்ளன. இலங்கையில் தயாரிக்கப்படும் திரைப்படங்களில் நான்கில் மூன்று ஆபாசப்படங்களாக அமைந்துள்ளன. இன்றைய சினிமாக்களில் கதையில்லை, பாடங்களோ, படிப்பினைகளோ இல்லை. குறைந்தது மொழியையாவது காணமுடியாது. தமிழ், ஹிந்தி சினிமாக்களில் இப்போது வன்முறையும், ஆபாசவர்ணனைகளும், பெண்களை சுகபோகப் பொருளாகவும், போதைப் பொருளாகவும் காட்டும் வகையிலேயே பாடல் வரிகள் எழுதப்பட்டுள்ளன. காதல் பாலுறவாகி, காதலர்கள் காமுகர்களாக சித்தரிக்கும் அவலத்தைத்தான் இன்றைய தமிழ் சினிமாவில் காணமுடியும்.

தென்னிந்திய ஊடகங்களைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் நாட்டு நடப்புக்கள், சமுதாய விழிப்புணர்வுத் தகவல்கள், அரசியல் பிரச்சாரம் என்றிருந்த இந்திய ஊடகங்கள் இன்று சமுதாய சீரழிவுக்கு இட்டுச் செல்கின்ற அளவுக்கு மாறிவருகின்றது. ஜோன் லொகிபெயாட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைக்காட்சி என்ற அழகிய கண்டுபிடிப்பு இன்று சமூக சீர்கேட்டுக்கு ஆளாக மாறிவிட்டது. எந்த அலைவரிசையில் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் இல்லையோ அந்த அலைவரிசையை எமது சமூகம் பார்ப்பதே கிடையாது அந்தளவிற்கு எமது சமூகம் பழகிவிட்டது. அதிலும் குறிப்பாக பெண்கள் அதைவிட வேகமாக இருக்கிறார்கள். தென்னிந்திய நாடகங்களின்

பாதிப்பால் பெண்கள் சீரழிந்து வருகின்றனர். இது இந்தியாவில் சமூக சீர்கேட்டையும், கலாச்சார சீர்கேட்டையும் ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல் இலங்கையிலும் ஊடுருவ ஆரம்பித்துள்ளது.

ஆபாசத் திரைப்படங்கள், வெப்தளங்கள், வீடியோக்கள், VCDக்கள், நூல்கள், சஞ்சிகைகள் முதலானவை மேற்குலகிற்கு அதன் கலாச்சாரத்தை பரப்புவதற்கான ஊடகங்களாக மட்டுமன்றி உலக நாடுகளில் பொருளாதாரத்தை சுரண்டுவதற்கான மிகச்சிறந்த வழியாகவும் அமைந்துள்ளது. இன்றைய உலகில் மிகவும் இலாபகரமான வியாபாரமாக ஆபாசத்தை சந்தைப்படுத்துவது காணப்படுகின்றது.

கட்டுப்பாடற்ற ஆண், பெண் உறவு கலாசார உலகமயப்படுத்தப்பட்டதன் விளைவை இன்றைய உலகம் மிக மோசமாக அனுபவிக்கத் துவங்கியுள்ளது. இன்று இக்கலாச்சாரத்தின் பரவல் மனித சமூகத்தின் இருப்பை அச்சுறுத்தி வருகின்றது. இக்கலாசாரத்தின் முக்கியமான விளைவுகளாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சட்டபூர்வமற்ற கருத்தரிப்பு, கருக்கலைப்பு, கற்பழிப்பு, தன்னினச் சேர்க்கை, ஆட்கொல்லி எயிட்ஸ் நோய், விவாகரத்து, விபச்சாரம், தற்கொலை, போதைவஸ்துப் பாவனை போன்றனவும் காணப்படுகின்றன.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயேகங்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளதுடன் அது சமூகத்தில் பாரிய தாக்கத்தினையும், அச்சத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. வீடுகள், பாடசாலைகள், விடுதிகள், கிராமங்கள், புகைவண்டிகள் என அனைத்து இடங்களிலும் வல்லுறவுகளும், துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ளன. கடந்த காலங்களில் பச்சிளம் பாலகியான 03வயது சிறுமி தொடக்கம் 14 வயது சிறுமி என சுமார் 25 நபர்களுக்கு மேல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளமை பற்றி செய்திகள் அறிவிக்கின்றன. இன்னும் சில சம்பவங்கள் வெளிவராமலும் மறைக்கப்பட்டும் உள்ளன.

அமெரிக்காவிலுள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு 21 மணிநேரத்திற்கு ஒரு பாலியல் வன்கொடுமைச் செயல் நடப்பதாக சமீபத்திய கருத்துக் கணிப்பு தெரிவிக்கின்றது. இதில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் புதிதாக கல்லூரி உலகத்திற்குள் நுளையும் இளம்பெண்கள் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவதாக கூறப்படுகின்றது. இதன் விளைவாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் புகார் அளிப்பதற்காக www.notalone.gov என்ற இணையத்தளத்தையும் தொடங்கியுள்ளனர். மேலும் "1 is 2 many" என்ற பொதுநல விளம்பரம் (PSA) ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வீடியோப் பதிவு உணர்த்தும் கருத்து இதுதான். அவள் சம்மதம் இல்லாமல் நடந்தால், அது பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் வன்கொடுமைதான்.

இந்தியாவில் கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி ஓடும் பேருந்தில் நடந்த கொடூரமான சம்பவத்திற்குப் பின் வர்மாகமிஷன் அளித்த அறிக்கையும் 2013ஆம் ஆண்டு செய்யப்பட்ட குற்றவியல் சட்டத் திருத்தமும் (The Criminal Low Amendment Act 2013) ஒரு சிறிய தொடக்கமே. பாலியல் வன்கொடுமை என்பது எக்காரணத்தாலும், ஏற்கத்தக்கதல்ல என்பதை வலியுறுத்த நாம் நீண்ட மைல்களை கடக்க வேண்டியுள்ளது.

1992இல் யூகோஸ்செலவாக்கியாவில் 12000பேர் வன்முறைக்கு உட்பட்டு இருக்கிறார்கள் 6நிமிடத்துக்கு ஒரு பெண் பலாத்காரம் செய்யப்படுகின்றாள். இதில் 5சதவீதமானோரே பொலீசில் முறையிடுகின்றனர். பப்புவாக்கினியில் 67.7 வீதமான கிராமப்புறப் பெண்கள் வன்முறைக்கு உள்ளாகின்றார்கள். கனடாவில் 4பேருக்கு ஒரு பெண் வன்முறையை அனுபவிக்கின்றாள்.

தாய்லாந்தில் இருந்து சுமார் 8-10000 பேர் விபச்சாரத்திற்காகக் கடத்தப்படுகின்றனர். ஆபிரிக்காவில் பல மில்லியன் பெண்கள் பிறப்புறுப்பு சிதைக்கும் சடங்குகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை காரணமாக மரணங்களும், சிசுக்கொலையும் அதிகமாக காணப்படுகின்றன. அதேநேரம் அண்மையில் இந்தியாவில் எட்டுப் பேர் சேர்ந்து எட்டு வயது சிறுமியான ஆசி.்.பாவுக்கு சிறிதளவு தண்ணீர் கூட கொடுக்காமல் மயக்கநிலையில் வைத்துக்கொண்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி மிகவும் அநியாயமான முறையில் அச்சிறுமி கொல்லப்பட்டாள். இக்கொலையினை உலகமே எதிர்கின்ற நிலையினை சமூகவலைத்தளங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடியும். கென்னியாவில் 42சதவீதமான பெண்கள் கணவனின் அடி உதைகளை வாங்க நேரிடுகின்றது.

2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸ் வெளியீட்டுள்ள முறைப்பாட்டு சுருக்கத்தின்படி 16 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் வன்புணர்வு சம்பந்தமாக உண்மையாக பதியப்பட்டுள்ள முறைப்பாடுகள் 346 உம், 16 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண் வன்புணர்வு சம்பந்தமான முறைப்பாடுகள் 1685 உம் ஆக மொத்தம் 2031 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ள போதிலும் அவ்வாண்டில் 24 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே தீர்வுகாணப்பட்டு மீதம் 2007 முறைப்பாடுகள் முடிவு பெறாத நிலையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தரவுகளை நாம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினால், ஏறத்தாள ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கும் 11 வன்புணர்வு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படுவதாகவும் அவற்றில் 16 வயதுக்கு குறைந்த பெண்களின் வன்புணர்வு கிட்டத்தட்ட 9 ஆக இருப்பதை நாம் நோக்கலாம். அவ்வாறு ஏறத்தாள ஒரு மாதத்திற்கு 169 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் 2 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே தீர்வு கிடைக்கின்றது. அல்லது 84 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் 1 முறைப்பாட்டுக்கு மாத்திரமே தீர்வு கிடைக்கின்றது எனலாம். இவற்றை பார்க்கும் போது பெண்ணியம் மீள்தோற்றம் பெறுவதற்கு இத்தகைய தீர்வு கிடைக்கப்பெறாத நிலையும் காரணமாக அமைகின்றது. மேலும் இலங்கையில் அண்மையில் மட்டக்களப்பு பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் பச்சிளங்குழந்தையின் தாய் தனது கணவனின் கொடூரமான பாலியல் வன்கொடுமையினால் பரிதாபகரமாக கொல்லப்பட்டாள். இக்கொடூர மரணம் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு செயல் என்பதால் அறிந்தவர்கள் யாராலும் மறக்கமுடியாத ஒரு சம்பவமாகும். இத்தகைய தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் இடம் பெறும் ஒட்டுமொத்த பிரச்சினைகளிலும் அதிகமாக காணப்படுவது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளாகும். அதிலும் இளம் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதினையும் இக்கருத்துக்கணிப்பினூடாக அறிந்து கொள்ளலாம்.

இலங்கையில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களுக்கென கடுமையான சட்டங்கள் காணப்பட்டாலும் நடைமுறையில் முறைப்பாடு, விசாரணை முறையில் வினைத்திறன் இன்மை, ஊழல், அதிகாரம் என்பன சட்டத்தின் நோக்கத்தை அடைய தடையாக அமைகின்றது. நாட்டின் எல்லா இடங்களிலும் தலைவிரித்தாடும் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பன உண்மையான குற்றவாளிகளை தண்டிக்க தடையாக அமைகின்றது.

கருக்கலைப்பானது இலங்கைச் சட்டத்தின்படி ஒரு குற்றச் செயலாகும். எனினும் நாளந்தம் ஆயிரம் கருக்கலைப்பு வீதம் நடைபெறுவதுடன் வருடாந்தம் இத்தொகை மூன்று இலட்சத்தை எட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மனம் போன போக்கிலான பாணியிலான உறவுகளே இந்நிலைக்கு காரணம் எனவும் தெரியவருகின்றது. இத்தகைய நிலையை கீழைத்தேயத்துக்கு உட்படுத்தியது

மேலைத்தேய மோகம் என்றே கூறவேண்டும். ஏனெனின் கருக்கலைப்பு மாத்திரை முதல் தேவையான மருந்து வகைகள் எளிதான முறையில் பெற்றுக் கொள்ள வழியமைத்துக் கொடுத்திருப்பது மட்டுமல்லாது அது தொடர்பான விடயங்களை சமூக வலைத்தளங்களில் அறிமுகப்படுத்தி மக்களுக்கு திணிக்கின்றனர். இதன் மூலம் பாலியல் ஆசைகளையும் தூண்டிவிட்டு அதற்கான பரிகாரங்களையும் உள்ளீடு செய்துள்ளனர். இத்தகைய நிலையே தவறுகள் அதிகம் இடம் பெறுவதற்கான காரணமாக அமைகின்றது. உலக அளவில் ஆண்டு ஒன்றுக்கு நிகழும் சுமார் 56 மில்லியன் கருக்கலைப்புக்களில் கிட்டத்தட்ட 45% பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களாகவே அமைகின்றது.

எமது நாகரிகம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் தொன்று தொட்டு விளங்கி வரும் சில தீய பழக்கங்கள் தொடர்ந்தும் நலிவடையாமல் வலிமைப் பெற்றுச் செல்கின்றது. மது, போதைவஸ்து மற்றும் சிகரெட் பாவனை இன்று ஆறு தொடக்கம் அறுவது வரை வேரூன்றி நிற்பது கவலைக்குரிய விடயமே! எமது நாட்டைப் பொறுத்த வரையில் தவறணைகளிலும், பேரங்காடிகளிலும் மதுவிற்காக ஏங்கி நிற்கும் நீண்ட வரிசைகளைப் பார்க்கும் போது எத்தனை பழக்க வழக்கங்கள் எமது கலாச்சாரத்துடன் வேரூன்றிவிட்டது என்பது புலப்படுகின்றது. வன்முறைமிக்க குடும்ப, சமூக பிரச்சினைகளின் தூண்டியாக மது பாவனை அமைந்திருப்பது நாம் எல்லோரும் வேதனையுடன் அவதானிக்கும் ஒரு விடயமாகும். இன்று சிறியவர், பெரியவர் எனும் வேறுபாடின்றி பெரும்பாலானோர் தமது ஆரோக்கியமான வாழ்க்கையையும், இன்பமான வாழ்க்கையையும், மகிழ்ச்சியான குடும்பத்தையும், குடும்ப கட்டுமானங்களையும் தொலைத்து கடனாளியாகவும், நோயாளியாகவும் அலைந்து திரிகின்றனர். அவர், தான் கெடுதலுமன்றி வருங்கால சந்ததியினரையும் அந்த பாதாளத்தில் இழுத்து விடுவது வேதனைக்குரிய விடயமாகும். இன்றைய காலகட்டத்தில் ஒருவர் போதைவஸ்து பாவிக்காமல் இருந்தால் அவரை இச்சமூகம் ஏளனமாக பாரக்கின்றது. இத்தகைய தோற்றத்துக்கு காரணமாக அமைவது உலகமயமாக்கல் ஆகும்.

உலகளாவிய ரீதியில் 15-64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். 80 வீதம் ஆண்களும் 20 வீதம் பெண்களும் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டு காலமாக போதைப்பொருள் பாவனையால் பல இலட்சம் பேர் உயிர் இழந்ததாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இலங்கையில் போதைப் பொருள் பாவனையில் முதலிடத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் 71% மாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் 22% மக்கள் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகியுள்ளனர். 600000 த்திற்கு மேற்ப்பட்டவர்கள் கஞ்சா பாவிப்பவர்கள் என கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுக்கு காரணமும் இந்த போதைவஸ்துதான். வவுனியாவில் ஹரிஸ்ணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதும் போதைப்பொருள் பாவனையினாலேதான். போதைவஸ்த்துக்கு அடிமையானவர்கள் 50% இல் 69% பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. மேல் நாட்டு மோகம் கிழக்கு உலகையையும் விட்டு வைக்கவில்லை. புதியபுதிய போதைப்பொருட்களை உற்பத்தி செய்து, இறக்குமதி செய்து வருங்கால பிள்ளைகளின் வாழ்க்கையினை கேள்வி குறியாக்கியுள்ளது உலகமயமாக்கல் செயற்பாடு.

உலக சுகாதர நிறுவனம் உலகில் கிட்டத்தட்ட 800000 பேர் ஒவ்வோரு ஆண்டும் தற்கொலையால் இறப்பதாக குறிப்பிடுகின்றது. 15 – 29 வயதுக்கிடைப்பட்டோரில் தற்கொலையே இறப்பிற்கு இரண்டாவது பெரிய காரணமாக அமைதாகவும் 78% மான தற்கொலைகள் குறைந்த அல்லது நடுந்தர வருமானம் கொண்ட நாடுகளிலேயே நடப்பதாவும் குறிப்பிடப்படுகின்றது. இணையத்தளங்களில் அச்சுறுத்துவது, அல்லது மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் ஊடகங்களில் பிரசுரமாவது போன்ற சில சமீபத்திய சமூகப் போக்குகள் இந்த அதிக இளம் உயிர்களை ஆபத்துக்குள்ளாக்கியிருக்கின்றன. 40 விநாடிக்கு ஒரு தற்கொலை என்ற அடிப்படையில் சாலை விபத்துக்கு அடுத்ததாக இறப்புக்கான காரணியாக தற்கொலை அமைகின்றது. அதிலும் குறைந்த வருமானமுள்ள தென்கிழக்காசிய நாடுகளிலேயே 39% தற்கொலைகள் இடம்பெறுகின்றன. மிகைப்படுத்தப்பட்ட பரபரப்பான செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் பலவீனமானவர்களை தற்கொலை முயற்சிக்கு தூண்டமுடியும். இதை வல்லுனர்கள் ''சமூகப் புற்றுநோய்'' என்கின்றார்கள். 2015 இல் 828,000 இறப்புக்கள் தற்கொலைகளால் நிகழ்ந்துள்ளன. மேலும் 15-29 வயதுக்கிடைப்பட்டோரில் தற்கொலையே இறப்பிற்கு இரண்டாவது பெரிய காரணமாக அமைகின்றது. ஓர் ஆண்டிற்கு 100,000 நபர்களில் 12பேர் இத்தகைய முடிவுக்கு ஆளாகிறார்கள். தற்கொலை செய்து கொள்ளும் பெண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. உதாரணமாக அண்மைக்காலத்தில் **Blue Whale** விளையாட்டு மூலம் தற்கொலை இடம்பெற்றதாக செய்திகள் குறிப்பிடுகின்றது. அதிகளவான தற்கொலைகள் பாலியல் துஷ்பிரயோகங்கள், ஆபாசப்படங்களை வைத்து மிரட்டல் போன்ற காரணங்களால் இடம்பெறுகின்றன.

ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள உறவு சுலபமானதில்லை. அது ஒரு சிக்கலான உறவு. இந்த உறவு நீடித்துச் செல்வதற்கு இருவருமே மனமார்ந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் விவாகரத்துக்கு 7 முக்கிய காரணங்கள் அமைகின்றது. அதில் நம்பிக்கைத் துரோகம் முதலிடம் பெறுகின்றது. கணவன்மார்கள் தங்களது மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதால், பெண்கள் விவாகரத்தை நோக்கிச் செல்கின்றனர். மேலும் ஆண்கள் பிற பெண்களின் வலையில் எளிதில் விழுந்து விடுவதால் இதனை சகித்துக் கொள்ளாமல் பெண்கள் விவாகரத்தை விரும்புகின்றனர். மேலும் முரட்டுத்தனமான நடவடிக்கைகள், மற்றவர் மீது ஆசை, சலிப்புத் தன்மை, உடலுறவில் பிரச்சினை, வன்கொடுமை என்பன விவாகரத்துக்குரிய காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலைக்கு காரணமாக அமைவது தொலைக்காட்சித் தொடர்கள், smart phones, இணையத்தளங்கள், மின்னஞ்சல், viber, whats app, Face book போன்ற சமூக வலைத்தளங்கள் ஆகும். ஏனெனின் அனேகமாக பிரச்சினைகள் இத்தகைய தொழிநுட்பங்களின் வருகை மூலமாகவே அமைகின்றன.

மேலும் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அழகு சாதனங்களைப் பயன்படுத்தி ஆண்களை இலகுவில் பெண்கள் தங்களது வலைக்குள் கொண்டு செல்கின்றனர். இதனால் குறித்த ஆண்கள் தன் மனைவி, பிள்ளைகளை விட்டு பிரிகின்ற நிலை ஏற்படுகின்றது. மேலும் மேலைத்தேய கலாச்சாரம் விவாகரத்தை ஒரு பிரச்சினையாக கொள்வதில்லை. ஆனால் கிழக்குலகில் அவ்வாறில்லை. பிடித்ததோ–பிடிக்கவில்லையே குறித்த ஆணுடன் தன் இறுதிக்காலம் வரை வாழ வேண்டியது பெண்களின் கடமையாகும். ஆனால் இன்று இலகுவில் விவாகரத்துப் பெறுகின்றனர்.

சட்டங்களும் இலகுவில் வளைந்து கொடுக்கின்றன. இலங்கையில் அதிகப்படியான விவாகரத்து இடம்பெறும் நகரமாக கொழும்பு 57% ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் 58% காதல் திருமணம் முடித்தவர்களாவர். 42% ஆனோர் பேச்சுவார்த்தையின் பின் நிச்சயித்து திருமணம் முடித்தவர்களாகும். திருமணம் செய்து கொள்பவர்களிடையே காணப்படும் புரிந்துணர்வின்னை காரணமாக இலங்கையில் தினமும் 300பேர் விவாகரத்து செய்து கொள்கின்றனர். மேலும் 3892 பேர் 18 வயதுக்கும் குறைந்த வயதில் தாய்மை அடைகின்றனர்.

விபச்சாரம், தன்னினச்சேர்க்கை முதலான முறைகேடான ஆண்-பெண் உறவுகள் குடும்பம் என்ற சிறிய சமூகத்தைத் தகர்க்கக்கூடியவையாகும். இயற்கை நியதிக்கும், இறை நியதிக்கும் முரணான இத்தகைய உறவுகள் குடும்ப அமைதியைக் குலைத்து சமுதாயத்தைச் சீரழிக்கும் பயங்கர ஈனச்செயல்களாகும். இவ்வாறான இழிசெயல்களில் ஈடுபடுவோர் திருமணத்தில் ஆசையற்று, இல்லற வாழ்வில் விருப்பமற்றவராக இருப்பர். இவர்கள் திருமணம் செய்துகொண்டாலும் தமது மனைவிமாரைப் புறக்கணிப்போராக இருப்பர். இதனால் பெண்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டு அவர்கள் மத்தியிலும் பல சீர்கேடுகள் தோன்ற வழிபிறக்கும். இத்தகைய நிலையில் கணவன், மனைவிக்கிடையே விரிசல் உருவாகி குழந்தைகளின் நல்வாழ்வு பாதிக்கப்படும். மொத்தத்தில் குடும்ப நிறுவனம் சீர்குலைந்து சமூக வாழ்வு சின்னாபின்னமாகிவிடும்.

இவை தவிர, முறைகேடான பாலியல் உறவுகளால் எத்தகைய பயங்கர நோய்கள் தோன்றுகின்றன என்பதை இன்றைய மருத்துவ உலகம் எடுத்துக் கூறுகின்றது. மக நோய் முதலான பல்வேறுபட்ட மோசமான பாலியல் நோய்கள் இன்று உலக சுகாதாரத்தை அச்சுறுத்திய வண்ணம் இருக்கின்றன. இன்று உலகையே ஆட்டிவைக்கும் பயங்கர ஆட்கொல்லி நோய் எய்ட்ஸின் தொடக்கப்புள்ளி முறைகேடான பாலியல் உறவுகள் என்பதை அறியாதவர் எவரும் இல்லை. மனநோய்கள் உருவாவதற்கும் முறைகேடான பாலியல் உறவுகள் காரணமாக அமைகின்றன என்பது இன்று நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மையாகும். இத்தகைய காரணங்களுக்காகவே முறைகேடான பாலியல் உறவுகள் மிகக் கடுமையாக கண்டிக்கப்படுகின்றது.

விளம்பரம் என்பது தகுதியுள்ள வாடிக்கையாளர்கள் தங்கள் சேவைகளை அதிக அளவில் வாங்க உண்டாக்கப்பட்ட தொடர்பு சாதனம் ஆகும். கிரியேட்டிவ் என்ற பெயரில் பெண்களை வக்கிரமாக காட்சிப்படுத்தி வருகின்றது விளம்பர நிறுவனங்கள். விளம்பரங்களில் பிற பொருட்களுடன் ஒப்பிட்டு தங்கள் பொருளின் தாக்கத்தை, பயனை கூறுவது என்பது பிரபலமான முறை. ஆனால் மதுபான விளம்பரத்தில், அதன் வடிவம், தாக்கம் மற்றும் பயனை ஒரு கார் மற்றும் நிர்வாண மாடலுடன் ஒப்பிட்டுள்ளனர். உலகின் பிரபலமான ஆடை தயாரிப்பு நிறுவனம் டி அன்ட் ஜி. இந்த நிறுவனத்தில் விளம்பரங்கள் என்று மட்டுமில்லை, பல ஆடை விளம்பரங்களில் பெண்களை கவர்ச்சி பொருளாக தான் காட்டுகிறார்கள். அதிலும் சில ஜீன்ஸ் ஆடை விளம்பரங்களில் பெண்களை அரைநிர்வாணமாக காட்சிப்படுத்துவது பரவலாக காணப்படும் விளம்பரமாக இருக்கிறது. மேலும் சில விளம்பரங்கள் கற்பழிப்பு, இச்சை எண்ணங்களை தூண்டும் வகையிலும் அமைந்திருக்கின்றன. இத்தகைய விளம்பரப்படுத்தல் செயல்கள் சமூகத்தைச் சீரழிப்பதோடு, பாலியல் சீர்கேடுகள் இடம்பெறவும் வழிசெய்கிறது.

ஒருவர் தமது இருப்பிடத்தை விட்டு வெளியில் ஓர் இடத்திற்குச் சென்று தங்கி மகிழ்ந்து புத்துணர்வு பெற்று மீளுதல் சுற்றுலா என வரையறுக்கப்படுகின்றது. பெருமளவிலான சுற்றுலாப்பயணிகளின் வருகையுடன் அபாயகரமான சமூகச் சீர்கேடுகளும் தோன்றியுள்ளன. பண்பாட்டுச் சுற்றுலாப்

பயணிகளின் நடை, உடை, பாவனைகளால் பல நாடுகளில் பண்பாடு சீரழிக்கப்படுவதோடு, பண்பாட்டு ஊடாட்டம் ஏற்படுவதும் அறியத்தக்கதாகும். குறிப்பாக, ஒரு பாற்புணர்ச்சி (Homosexual), பாலியல் பகிர்வு (Sexual Sharing), பெருநகரங்களில் "Live in relationship" என்ற பெயரில் திருமணமாகாத ஆணும் பெண்ணும் ஒரே வீட்டில் சேர்ந்து வாழும் அவலம், சுற்றுலாப் பயணிகளின் நடை, உடை, பாவனை போலச் செய்யும் போக்கு (Imitation) எடுத்துக்காட்டாக, அரை குறை ஆடை அணியும் பழக்கம் வேகமாகப் பரவுதல், சுற்றுலாப் பயணிகளின் சூரியக் குளியல் மற்றும் காதல் லீலைகள் அதிலும் குறிப்பாக, பொது இடங்களில் முத்தமிடல் போன்ற ஆசியப் பண்பாட்டிற்கெதிரான அவலங்கள் உள்நாட்டில் இளைஞர்களிடையே பண்பாட்டுச் சீரழிவுக்கும் ஈவ்டீசிங் போன்ற பாலியல் தூண்டலுக்கும் வழிவகை செய்வதும் அறியத்தக்கது. இவ்வாறு உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சீரழிவுகள் மட்டுமின்றி இன்று சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஹெரோயின் (heroin), மோர்பீன் (morphine), கோக்கைன் (cocaine), மார்ஜவானா (marijuana), LSD மாத்திரைகள் போன்ற போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.

சுற்றுலா வளர்ச்சியின் மற்றுமொரு விளைவு பெண்களையும் சிறுவர்களையும் பாலியல் துஸ்பிரயோகத் தொழிலுக்கு இட்டுச் செல்வதாகும். அதிலும் குறிப்பாக, சிறுவர் விபச்சாரத்தில் உலக நாடுகளில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற சில நாடுகளிற்கு அதிக செல்வாக்கு இருப்பதாக கூறப்படுகிறது. சிறுவர்களுடன் விபச்சாரத்தில் ஈடுபடுவோரினால் இந்நாடுகள் ஒரு சொர்க்காபுரியாக கொள்ளப்படுகின்றது. பாலியல் துஸ்பிரயோகம் ஒரு சமூகப் பிரச்சினை மட்டுமல்ல. அது ஒரு தனிமனித ஒழுக்கப் பிரச்சினையுமாகும். வளமான மற்றும் செழிப்பான தேசத்தை உருவாக்க சுற்றுலா வளர்ச்சி முக்கியமாகும். அதே சமத்தில், சுற்றுலாவினால் விளையும் சமூகச் சீரழிவுகளும் களையப்பட வேண்டும். இத்தகைய நிலைமைகளுக்கு காரணமாக அமைவது உலகமயமாக்கல் செயற்பாடு என்பதை நாம் இவற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

## முடிவுரை

இன்றைய சமயசார்பற்ற – சடவாத மேற்குலக கலாசாரம், மனிதன் தனது பாலுணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ள எத்தகைய கட்டுப்பாடுகளோ வரையறைகளோ ஆன்மிக, தார்மீக ஒழுக்கங்களோ அவசியமில்லை எனக் கருதுகின்றது. திருமணம், வீடு, குடும்பம் என்பனவெல்லாம் பெண்களை நிரந்தரமாக அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் ஒரு சாபமே அன்றி வேறில்லை என்பது இந்தக் கலாசாரத்தின் நிலைப்பாடாகும். இக்கருத்தியலின் பயங்கரவாத விளைவுகளை இன்றைய உலகம் எவ்வாறு அனுபவிக்கின்றது என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ளலாம்.

உலகமயமாதல் பலமான மொழி, பண்பாட்டு, அடையாளங்களை முன்னிறுத்தி சிறுபாண்மை இன, மொழி, பண்பாட்டு அழிவுக்கு அல்லது சிதைவுக்கு இட்டுச் செல்வதாக சிலர் வாதிக்கின்றனர். எனினும் ஒரு சமூகத்தின் அடிப்படைக் கூறுகளை இழக்காமல் உலகமயமாதல் உந்தும் அல்லது தருவிக்கும் அம்சங்களையும் ஒரு சமூகம் ஏற்றுக் கொள்ள முடியும். அதாவது உலகமயமாதல் இருக்கும் ஒன்றின் அழிவில் ஏற்படாமல், இருக்கும் ஒன்றோடு அல்லது மேலதிகமான அம்சங்களை அறிமுகப்படுத்தும் ஒரு உந்தலாகவும் பார்க்கலாம்.

## உசாத்துணைகள்

- ஜமாஹிர்.பீ.எம்., 2010, மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும், நதா வெளியீடு, தன்கொல்லை, கண்டி.
- சிவானந்தமூர்த்தி.க., 2012, ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும், லங்கா புத்தக சாலை, குணசிங்கபுர, கொழும்பு-12.
- ஞானகுமாரன்.நா., 2003, மெய்யியல், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
- அனஸ்.எம்.எஸ்.எம்., 2003, மெய்யியல் அறிமுக உரைகள், பண்பாட்டு வட்டம், பேராதனை.
- https://www.google.lk/search?
- https://www.google.lk/search?
- https://mahalukshmiv.wordpress.com/2015/10/30
- https://tamil.boldsky.com/relationship/2013/07/top-7-reasons-why-women-divorce-men-003544.html
- https://isha.sadhguru.org/in/ta/wisdom/article/tharkolaikku-enna-kaaranam
- http://metromirror.lk/?p=11135
- http://www.newjaffna.net/?cat=16
- http://metromirror.lk/?p=11135
- https://www.google.com/search?q=globalization&ie=utf-8&oe=utf-8&client=firefox-b-ab